சுடர் ஒளி

THE SUDAR OLI

සුඩර් ඔළි

விலை 10/=

23.07.2020 வியாழக்கிழமை

# டக்ளஸ், அங்கஜனால் அதிகாரிகளுக்கு சிக்கல்

யாழ்ப்பாணம், ஜூலை 23
அமைச்சர் சமல் ராஜபக்ஷ கலந்து கொண்ட அரச நிகழ்வில் வேட்பாளர்களான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் அங்கஜன் இராமநாதன் ஆகியோர் பங்கேற்றமையால், நிகழ்வை ஒழுங்கமைத்த அதிகாரிகளுக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது.
'அரச நிதியில் ஆரம்பிக்கப்படும் நிகழ்வில் வேட்பாளர்கள் கலந்து கொள்ள முடியாது. ஏதாவதொரு வேட்பாளர்

6

# 'டில்லு குரூப்' நபர் கைது



யாழ்ப்பாணம், ஜூலை 23
பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் நேற்று யாழ்ப்பாணம் நகரப்பகுதியில் வைத்து இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர். 'டில்லு குரூப்' என அழைக்கப்படும் சமூக விரோத செயற்பாட்டுடன் தொடர்புடைய குழுவைச் சேர்ந்த

6

## புதினம்? தெரியுமோ

மெத்தப்படிச்சு, உத்தியோகத்தில இருக்கிறவை தான் தபால் மூலம் வாக்களிக்கிறவை. ஆனால் படிப்புக்கும் வாக்களிப்புக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லையெண்ட மாதிரித் தான் ஒவ்வொரு முறையும் அவை நடந்து கொள்ளுவினம். ஜனாதிபதித் தேர்தலில யாழ்ப்பாணத்தில இருந்து போடப்பட்ட தபால் மூல வாக்குகளில ஒரு தொகுதி வாக்குகள் கழுகுச் சின்னத்துக்கும் போடப்பட்டிருந்திச்சு. ஆனா உண்மையில அது கழுகுக்குப் போடப் படேலை. அன்னமெண்டு நினைச்சுத்

6

# கறுப்பு ஜூலை நினைவேந்தல்!

அச்சுவேலி, ஜூலை 23
வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையில் கறுப்பு ஜூலை நினைவேந்தல் இன்று வியாழக்கிழமை காலை அனுஷ்டிக்கப்பட்டது.
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை வளாகத்தில் தவிசாளர் தியாக ராஜா நிரோஷ் தலைமையில்

6

# சர்வதேசத்தை நம்பினால் சம்பந்தருக்கு ஏமாற்றமே!



கொக்கரிக்கிறார் கெஹலிய ரம்புக்வெல

**கொழும்பு, ஜூலை 23**
**"சர்வதேசம் ஒருபோதும் இலங்கைத் தமிழர்களுக்கு எந்தவொரு தீர்வையும் வழங்கமாட்டாது.எனவே இனியும் சர்வதேசத்தை நம்பினால் சம்பந்தர் தொடர்ந்தும் ஏமாறவே நேரிடும்".**

6

# டிப்பர் விபத்து சிப்பாய் காயம்

கொடிகாமம், ஜூலை 23
வேகக்கட்டுப்பாட்டை இழந்த டிப்பர் மோதியதில் சிப்பாய் ஒருவர் உட்பட இருவர் காயமடைந்தனர். பிள்ளையார் கோயில் ஒன்றும் சேதமடைந்தது.
இந்தச் சம்பவம் தச்சன் தோப்பு சந்தியிலிருந்து 200 மீற்றர் தூரத்தில் உள்ள தெருவடிப் பிள்ளையார் கோயிலடியில் இன்று வியாழக்கிழமை காலை

6

# 70 வீதமானோர் வாக்களிப்பராம்!

## மஹிந்தவின் நம்பிக்கை இது

கொழும்பு, ஜூலை 23
"எதிர்வரும் பொதுத் தேர்தலில் 70 சதவீதத்துக்கும் அதிகமாக வாக்குகள் பதிவாகும் "என்று நம்புகிறேன் இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ச நம்பிக்கை வெளியிட்டுள்ளார். அஞ்சல் மூல வாக்களிப்பில் அதிகளவு வாக்கு

6

# கூரை பிரித்து நகை திருட்டு

அச்சுவேலி, ஜூலை 23
வீட்டில் உள்ளவர்கள் சுபநிகழ்வு ஒன்றுக்காகச் சென்றவேளை, வீட்டின் கூரையைப் பிரித்து உள்ளே நுழைந்த திருடர்கள் 2 பவுண் நகை, 2 கமரா என்பவற்றைத் திருடிச்சென்றுள்ளனர். இந்தத் திருட்டுச் சம்பவம் வளலாய் வடக்கு பகுதியைச் சேர்ந்த பெற்ரீரியர்

6



# சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 23
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ் கிளிநொச்சி மாவட்ட வேட்பாளர்கள் நல்லை ஆதீன குரு முதல்வர் ஞானதேசிய சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமியை இன்று வியாழக்கிழமை சந்தித்து கலந்துரையாடினர்.
இச் சந்திப்பில் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தலைமையில்,கூட்டமைப்பின் வேட்பாளர்களான ஈ.சரவணபவன், எம்.ஏ.சுமந்திரன், சி.சிறிதரன்,திருமதி சசிகலா ரவிராஜ், இமானுவேல் ஆனல்ட், தபேந்திரன்

6

# ஆலயப் பொங்கலை அரசியலாக்காதீர்!

முல்லைத்தீவு, ஜூலை 23
முல்லைத்தீவு, பழைய செம்மலை நீராவியடி பிள்ளையார் ஆலயத்தின் பொங்கல் விழா நாளை ஆடிப்பூர நன்னாளில் இடம்பெறவுள்ளது. இந்தப் பொங்கல் விழாவை அரசியல் மயப்படுத்தவேண்டாம் என பிரதேச அரசியல்வாதிகளிடம், ஆலய நிர்வாகத் தலைவர் கோரிக்கை

6

# சிறுவர்களை தடுத்துவைக்க ஒருபோதும் அனுமதிக்கேன்!

## வடக்கு ஆளுநர் உறுதி

யாழ்ப்பாணம், ஜூலை 23
"சிறுவர்களை தடுப்புக் காவல் இல்லங்களில் தடுத்து வைக்க நான் ஒருபோதும் அனுமதிக்க மாட்டேன். ஏனெனில் அவ்வாறு தடுத்து வைத்தல், சிறைக்குள் அடைத்தல் என்பன சிறுவர்களை அதிக மன உளைச்சலுக்கு உள்ளாகி தவறான வழியில் பயணிக்க வைக்கக் கூடும் "என்று வடக்கு மாகாண ஆளுநர் திருமதி. பி.எம்.எம் சார்ள்ஸ்

6



# கூட்டுறவை அழியவிடாது பேணுவதில்
## பனை,தென்னை கூட்டுறவு சங்கங்கள் முதன்மை
### யாழ். பிரதேச செயலாளர் புகழாரம்

யாழ்ப்பாணம், ஜூலை 23

கூட்டுறவை அழியவிடாது பாதுகாப்பதில் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுற வு சங்கங்கள் முதன்மை பெறுகிறது என்று யாழ் பிரதேச செயலர்.எஸ்.சுதர்சன் புகழாரம் சூட்டினார்.

கடந்த ஜூலை 22 அன்று இடம்பெற்ற பனை அபிவிருத்தி வார கண்காட்சி நிகழ்வு யாழ். மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்களின் சமாசம், யாழ். கொத்தணி, வலிகாமம் கொத்தணி ஆகியவற்றின் அங்கத்துவ சங்கங்கள் ஆகிவற்றால் ஒழுங்கு செய்யப்பட்டு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே யாழ் பிரதேச செயலர் எஸ்.சுதர்சன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்று எமது மக்களின் நவீன முறைமைப் பழக்கங்களினால் எமது பெரும் வளங்களில் ஒன்றான பனை வளத்தின் பயன்பாட்டை மறந்து வாழும் நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறான நிகழ்வின் மூலம் எல்லோரையும் பனையின் பயன்பாட்டினை ஈர்க்கும் நிலை உருவாகும். எனவே இது போன்ற நிகழ்வுகளை ஆண்டு தோறும் நடத்த வேண்டும் - என்றார். (ரி2.63)

# பாடசாலைகளுக்கு புதிய சுற்றறிக்கை

கொழும்பு, ஜூலை 23

எதிர்வரும் திங்கட்கிழமை முதல் மீண்டும் பாடசாலைகள் ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில், மாலை 3.30 வரை கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. அந்தந்த வகுப்புகளுக்கான ஆசிரியர்களைத் தவிர வேறு ஆசிரியர்கள் பாடசாலைகளுக்கு வர வேண்டிய அவசியமில்லை எனவும் இந்த விதிகளுக்கான புதிய சுற்றறிக்கை இன்று அல்லது நாளை வெளியிடப்படவுள்ளதாகவும் அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, எதிர்வரும் திங்கட்கிழமை 11, 12 மற்றும் 13ஆம் வகுப்புகளுக்கான கற்றல் நடவடிக்கைகளே ஆரம்பிக்கப்படவுள்ளன. அத்துடன் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 10ஆம் திகதி ஏனைய அனைத்து வகுப்புகளும் ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி3)

# கப்பல் மாலுமிகள் உட்பட 29 பயணிகள் இலங்கைக்கு வந்தனர்

கொழும்பு, ஜூலை 23

கப்பல் மாலுமிகள் உள்ளிட்ட 29 பயணிகள் விசேட விமானம் மூலம் இன்று கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

கட்டார் விமான சேவைக்குச் சொந்தமான கியூ.ஆர் 668 எனும் இலக்க விசேட விமானத்தின் மூலம், கட்டாரின் டோகா நகரில் இருந்து கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு இன்று அதிகாலை 1.33 மணிக்கு இவர்கள் வந்தடைந்தனர்.

விமான நிலையத்துக்கு வருகை தந்த, இவர்கள் அனைவரும் கொரோனாத் தொற்றுக்கான பி.சி.ஆர் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ரி2)

# இம்முறை கதிர்காம ஆடிவேல் விழா அன்னதானம் இடைநிறுத்தம்

கொழும்பு, ஜூலை 23

கதிர்காம ஆடிவேல் விழாவையொட்டி கடந்த 17 வருடகாலமாக நடத்திவந்த அன்னதானம் இம்முறை நிறுத்தப்பட்டுள்ளதாக அன்னதான சபையின் இணைப்பாளர் எஸ்.ஞானசுந்தரம் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் காரணமாக நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையைக் கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 17 வருடகாலமாக இந்து கலாசார திணைக்களத்தின் கதிர்காம இந்து யாத்திரிகர் விடுதியில் சிவபூமி அன்னதான தொண்டர் சபையினரால் அன்னதானம் சிறப்பாக நடைபெற்று வந்ததோடு, அதில் பல இலட்சக்கணக்கான பக்த அடியார்கள் பசியாறி வந்தனர். ஆனால் இம்முறை அதனை நடத்தக்கூடிய சூழ்நிலை இல்லை என்பதால், அதனை நிறுத்துவதற்குத் தீர்மானித்ததாக இணைப்பாளர் எஸ்.ஞானசுந்தரம் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்து யாத்திரிகர் விடுதியும் இம்முறை பக்தர்களுக்கு அல்லாமல் கொரோனாத் தடுப்பு அலுவலர்கள் தங்குவதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதேபோல் கதிர்காமம் மற்றும் உகந்தமலை முருகன் ஆலய ஆடிவேல் விழாக்காலங்களில் மேற்கொள்ளப்படும் வழமையான விசேட போக்குவரத்து ஒழுங்குகள் நாட்டின் கொரோனா கட்டுப்பாடுகள் காரணமாக மேற்கொள்ளப்படவில்லையெனவும் தெரிவிக்கப்படுகின்றது.(ரி2)



# அவளுக்கு ஒரு வாக்கு;
## தேர்தல் பிரசாரம் யாழில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 23

அவளுக்கு ஒரு வாக்கு எனும் தொனிப்பொருளில் பெண் வேட்பாளர்களுக்கான வாக்கு சேகரிக்கும் பிரசாரப் பணி யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகியுள்ளது. வடமாகாணத்தைச் சேர்ந்த பொது அமைப்புக்களில் அங்கம் வகிக்கும் பெண்களின் கூட்டிணைவில் இந்தப் பிரசாரப்பணிகள் ஆரம்பமாகியுள்ளன. இப்பிரசாரப் பணி குறித்து செயற்பாட்டாளர்களான எஸ். தீபா, ஐ.நாகரஞ்சினி, எஸ்.சஹானா மற்றும் லயன் ஆனந்தி ஆகியோர் தெரிவித்துள்ளதாவது;

பெண்கள் அரசியலில் ஈடுபடல் வேண்டும். எமது உரிமைகள் குறித்து பெண்களால் தான் பேச முடியும். எந்தக் கட்சி என்று நாம் குறிப்பிட விரும்பவில்லை. கட்சிகளுக்கு அப்பால் ஆளுமையான கெட்டித்தனமுடைய பெண்களை நாம் தான் தெரிவு செய்ய வேண்டும். அந்தவகையில் மூன்று விருப்பு வாக்குகளில் ஒரு வாக்கை மட்டும் பெண்களுக்கு வழங்குவதனூடாக பெண் பிரதிநிதித்துவத்தை அங்கீகரிக்கச் செய்வோம். இதனைத் தான் நாம் அனைத்து பெண்களிடமும் கோரி நிற்கின்றோம் எனத் தெரிவித்தனர். வீடுகள் தோறும் செல்லும் இவர்கள் பெண் பிரதிநிதித்துவத்தின் அவசியத்தை வலியுறுத்தி வருகின்றனர்.

இச் செயற்பாடுகள் கொக்குவில், யாழ்ப்பாணம், நாவாந்துறை ஆகிய இடங்களில் இடம்பெற்றுள்ளமையுடன் மன்னார், வன்னி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் இது குறித்து தெருவெளி நாடகங்ளை மகாலட்சுமி குருசாந்தன் தலைமையிலான மன்னார் மாதர் அபிவிருத்தி ஒன்றியம் செயல்முனைப்புடன் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ரி2-27)



புதிய கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் நிஷாந்த உலுகேதென்ன விமானப்படை தளபதி எயார் மார்ஷல் சுமங்கல டயஸ்ஸை விமானப்படைத் தலைமையகத்தில் சந்தித்தார்.

### முன்னாள் பெண் போராளியின் வீடு உடைக்கப்பட்ட விவகாரம்
# மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணை

கிளிநொச்சி திருநகர் தெற்கில் வசித்து வரும் முன்னாள் பெண் போராளி வசித்து வந்த வீடு உடைக்கப்பட்டு, அவரது உடைமைகள் வீதியில் வீசப்பட்டமையுடன், அவரும் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இது தொடர்பில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுசெய்தும் அவர்கள் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என பாதிக்கப்பட்ட பெண் குற்றம் சுமத்தி இருந்தார், வீடு உடைப்பதற்கு வந்தவர்கள் தாம் கிளிநொச்சி பொலிஸாரின் ஒத்துழைப்புடனேயே இதைச் செய்கின்றோம் எனவும் தன்னிடம் தெரிவித்தனர் என அவர் கூறி இருந்தார்.

இது தொடர்பில் அந்தப் பெண் கடந்த திங்கட்கிழமை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கிளிநொச்சி பிராந்திய அலுவலகத்தில் முறையிட்டதற்கு அமைவாக மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணைகளை முன்னெடுத்துள்ளது எனவும், இச் சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கைகள் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ் அலுவலகம் அறிக்கை கோரியுள்ளதாகவும் மேற்படி ஆணைக்குழுவின் யாழ் பிராந்திய ஆணையாளர் ரீ.கனகராஜ் தெரிவித்துள்ளார்.

தற்போது இந்தப் பெண் ஊடகம் ஒன்று அமைத்துக்கொடுத்துள்ளதற்பால் கொட்டில் ஒன்றில் வசித்து வருகின்றார். அத்துடன் இவர் மூன்று மாவீரர்களின் சகோதரியும், இவரது கணவன் காணாமல் ஆக்கப்பட்டவர்களில் ஒருவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ரி3-214)











கடந்த ஜுலை 20ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 25ஆம் திகதி சனிக்கிழமை வரை "72 வருட தமிழினப் படுகொலை" என்ற தலைப்பில் பிரான்ஸ் நெவேர் இளையோர்களால் கண்காட்சி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 'தமிழர் இயக்கம்' ஏற்பாடு செய்துள்ள இந்த நிகழ்வில் பெருந்தொகையான இளையோர் பங்கேற்றுள்ளமையுடன், கண்காட்சியை பெருந்தொகை யான மக்கள் பார்வையிட்டு வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. இந்த நிலையில், இலங்கையில் யுத்தத்தின்போது இடம்பெற்ற படங்களைப் பார்வையிட்ட பிரெஞ்சு மக்கள் தமிழின அழிப்பிற்கு எதிராக நீதி கேட்கும் கோரிக்கையில் கையொப்பம் இட்டு தங்களது ஆதரவை வழங்கி வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ரி3)

## விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்க

# கைகொடுத்த பாகிஸ்தானை ஒருபோதும் மறக்கமாட்டோம்

### பாதுகாப்புச் செயலர் கமால் குணரட்ண தெரிவிப்பு

கொழும்பு, ஜுலை 23

நீண்ட தசாப்தங்களாக நாட்டில் காணப்பட்ட பயங்கரவாதத்தை முற்றாக இல்லாதொழிக்கும் நடவடிக்கையின் போதும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை இலங்கைக்கு எதிராக சுமத்திய சந்தர்ப்பத்திலும் பாகிஸ்தானி னால் இலங்கைக்கு வழங்கப் பட்ட ஒத்துழைப்பை ஒருபோ தும் மறக்க முடியாது என பாதுகாப்பு செயலாளர் மேஜர் ஜெனரல் (ஓய்வு) கமல் குண ரட்ண தெரிவித்தார்.



பாகிஸ்தான் கட்டளை மற்றும் பதவிநிலை அதிகாரிகள் கல்லூ ரியின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு இலங் கைக்கான பாகிஸ்தான் உயர் ஸ்தானிகராலயத்தினால் ஏற் பாடு செய்யப்பட்ட 'நூற் றாண்டு பதக்கங்கள்' வழங்கும் வைபவம் பாகிஸ்தான் குவெட்டா நகரில் நேற்று இடம்பெற்றது. இதில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

ஆபத்தில் உதவும் நண்பனே உண்மையான நண்பன் அதன் படி இலங்கை பயங்கரவாதத் திற்கு எதிராக யுத்தத்தை முன் னெடுத்த சமயத்தில் பாகிஸ்தா னால் இலங்கைக்கு வழங்கப் பட்ட பங்களிப்பை இலங்கை யர்கள் என்ற வகையில் நாம் ஒருபோதும் மறக்கமாட்டோம். புலிகளைத் தோற்கடிக்கும் கடுமையான போர் நடவடிக்கை யின் போதும் இரு நாடுகளுக் கும் இடையிலான இரு தரப்பு உறவுகள் வலுவாகக் காணப் பட்டன.

இலங்கையும் பாகிஸ்தானும் தமது உறவுகளை மிகவும் ஆரோக்கியமாக பேணி வருகின் றன. இந்த உறவுகள் அன்று முதல் இன்று வரை வளர்ச்சி அடைந்து வருகின்றன எனத் தெரிவித்தார். (ரி1)

## போதைப்பொருள் கடத்தலுக்கும் பொலிஸ் அதிரடிப்படையினருக்கும் தொடர்பில்லை

கொழும்பு, ஜுலை 23

போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு அதிகா ரிகள் சிலர் முன்னெடுத்தனர் எனக் கூறப்ப டும் போதைப்பொருள் கடத்தலுடன், பொலிஸ் விசேட அதிரடிப்படையினரும் தொடர்பு பட்டுள்ளமை தொடர்பில், இதுவரையான விசாரணைகளில் கண்டறியப்படவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் குற்றப் புல னாய்வுப் பிரிவினரால் விசேட விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜாலிய சேனாரத்ன தெரிவித் துள்ளார்.

பொலிஸ் திணைக்களத்துடன் தொடர்பு டைய எந்தவொரு நிறுவனமும் இந்த விவகாரத்துடன் தொடர்புபட்டிருப்பதாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டால் அது தொடர்பில் விசாரணைகளை முன்னெ டுக்குமாறு பிரதிப் பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்ரமரத்ன ஆலோசனை வழங்கியுள் ளார் எனப் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ரி2)



## யானை தாக்கி ஒருவர் பலி

திருகோணமலை, ஜுலை 23

திருகோணமலை அல்லை கந்தளாய் பிரதான வீதியை அண்டிய சேருநுவர பகுதியில் யானை தாக்கி இரண்டு பிள்ளை களின் தந்தையொருவர் உயிரி ழந்துள்ளார்.

இச் சம்பவத்தில் கந்தககனாவ, அசலகல, மகியங்கனை பகுதி யைச் சேர்ந்த கத்தரசிங்க ஆராச்சிலாகே அந்துன் டத்துர ஹாத்தப்பான்கொட என்கின்ற 52 வயதுடைய ஒருவரே உயிரி ழந்துள்ளார். (ரி3)

## அரச அதிகாரிகள் பக்கச்சார்பின்றி நடந்துகொள்ள வேண்டும்

### சித்தார்த்தன் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜுலை 23

சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தல்களை நடத்துவதில் பெரும் பங்காற்ற வேண்டிய அரச அதிகாரி கள் பக்கச்சார்பின்றி நடந்துகொள்ள வேண்டியது அவசியமாகின்றது என புளொட் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். தேர்தல் மாவட்ட வேட்பாளருமான த.சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

வடக்கில் தமிழ்த் தேசிய அரசி யலை முடக்கும் நோக்குடன் பல்வேறு செயற்பாடுகள் முன்னெ டுக்கப்பட்டுள்ளன. படையினரும், புலனாய்வாளர்களும் போதுமான அளவில் களமிறக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அரச கட்சிகள் மற்றும் வேட்பாளர்களுக்கு ஆதரவான பிரசாரங்களில் மும்முரமாக ஈடு பட்டு வருகின்றார்கள். இவ்வா றான நிலையில் இப்போது அரச அதிகாரிகள் சிலர், தாம் ஆதரவ ளிக்கும் அரச கட்சிகளுக்கும், வேட்பாளர்களுக்கும் வாக்களிக்கு மாறு தமக்கு கீழ் பணியாற்றும் ஊழியர்களுக்கு அழுத்தங்களைப் பிரயோகித்து வருகின்றார்கள்.

குறிப்பாக, உடுவில் பிரதேச செய லாளர் இவ்வாறான செயற்பாடுக ளில் ஈடுபட்டு வருகிறார் என எனது கவனத்திற்கு கொண்டுவரப் பட்டுள்ளமையை குறிப்பிட்டுக்கூற முடியும். இவ்விதமான செயற்பாடு கள் பொருத்தமற்றவையாகக் காணப் படுவதோடு, தேர்தல் சட்டங்களை மீறுபவையாகவும் காணப்படுகின் றன. ஆகவே மேலும் ஒரு சில அதிகாரிகளின் இவ்வாறான செயற் பாடுகள் அர்ப்பணிப்பான சேவை யாற்றும் அரச அதிகாரிகளுக்கு களங்கத்தை விளைவிப்பதாகவே உள்ளது -என்றார். (ரி3)



## கிளிநொச்சியில் வெடிபொருள்கள் மீட்பு

கிளிநொச்சி, ஜுலை 23

கிளிநொச்சி தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புளியம்பொக் கணைப் பகுதியில் 11 வெடிபொ ருள்கள் மீட்கப்பட்டுள்ளன. நேற்று முன்தினம் அந்தப் பகுதியில் சந்தே கத்துக்கிடமாக பொருள் காணப்ப டுவது தொடர்பில் பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைவாக அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டி ருந்தது.

அங்குள்ள பற்றை ஒன்றில் காணப் பட்ட பொதி ஒன்று தொடர்பில் சோதனையிடுவதற்காக கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் அனுமதி பெறப்பட்டதை அடுத்து நேற்றுக் காலை இந்த விசேட அதிரடிப்படையினர் சோதனை நட வடிக்கையை முன்னெடுத்திருந்த னர். இதன்போது பை ஒன்றிலி ருந்து 11 வெடி பொருள்கள் மீட்கப்பட்டன. சம்பவம் தொடர் பான விசாரணைகளை தர்மபுரம் பொலிஸார் முன்னெடுத்து வரு கின்றனர். (ரி2-6)

# தேர்தலை நடத்துவதற்கு ஜப்பான் 8.5 மில்லியன் நிதி

கொழும்பு, ஜுலை 23

இலங்கை பொதுத்தேர்தலை நடத்துவதற்காக ஜப்பான் அரசாங்கம் 47,019 அமெ ரிக்க டொலர்களை (சுமார் 8.5 மில்லியன் ரூபா) நிதி யுதவி வழங்கியுள்ளது.



இலங்கையில் சுதந்திரமான மற்றும் நீதியான தேர்தலை நடத்துவதன் மூலம், ஜனநா யக மயமாக்கலை தக்கவைக் கும் திட்டத்தின் கீழ் இந் நிதி வழங் கப்பட்டுள்ளது. இதற்கான ஒப்பந் தம் நேற்றுக் கைச்சாத்திடப்பட் டுள்ளது என்று ஜப்பானியத் தூதர கம் வெளியிட்ட ஊடக அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது,

இந்த திட்டத்தின் கீழ், ஒரு முன் னணி உள்ளாட்சி தேர்தல் கண்கா ணிப்பு அமைப்பாக, பவ்ரல் நடுநிலை அடிப்படையில் தேர்தல் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளும், இதனால் ஆகஸ்ட் 5 ஆம் திகதி வரவிருக்கும் பொதுத் தேர்தல் சுதந்திரமாகவும் நியாயமாகவும் நடத்தப்படும். இந்த திட்டத்தில் நாடு முழுவதும் உள்ள ஒவ்வொரு வாக்குச் சாவடி மற்றும் வாக்கெண்ணும்

நிலையத்திலும் 460 தேர்தல் கண்காணிப்பாளர்களுக்கான பயிற்சி திட்டங்கள் உள்ளன. இலங்கையின் நீண்டகால நண்ப ராக ஜப்பான், இலங்கையில் ஜனநாயகத்தை பலப்படுத்துவ தற்கு கடந்த இரண்டு தசாப்தங்க ளாக பவ்ரலுக்கு தனது ஆதரவை அளித்து வருகிறது. கொரோனா வுக்கு எதிரான போரில் ஜப்பான் நாட்டிற்கு தனது ஒற்றுமையை மீண்டும் வலியுறுத்துகிறது. எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி1)

# மக்களின் மேம்பாட்டுக்கு ஈ.பி.டி.பி.தான் பக்கபலம்

### கூறுகின்றார் டக்ளஸ் தேவானந்தா

யாழ்ப்பாணம், ஜுலை 23

மக்களின் தன்னம்பிக்கைக்கும் அவர்க ளின் வாழ்வாதார மேம்பாடு மற்றும் அபிவிருத்திக்கும் ஈழ மக்கள் ஜனநா யகக் கட்சி என்றென்றும் பக்கபல மாக இருக்கும் என்று அதன் செய லாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். நடைபெறவுள்ள தேர்தலை முன்னிட்டு யாழ்ப்பாணத் தில் நடைபெற்ற பரப்புரைக் கூட்டம் ஒன்றில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:

நான் கட்சியின் நலனுக்கு அப்பால் மக்களின் நலன்களையும் மேம்பாடு களையுமே முக்கியமானதாகக் கருதுகின்றேன். மக்களுக்காக கடந்த காலங்களில் அரசுகளுடன் இணக்க அரசியலை முன்னெடுத்து அதனூ டாகப் பலவற்றை நாம் செயற்படுத் திக் காட்டியுள்ளோம்.

ஆனால் தேர்தல் என்று அறிவிக்கப் பட்டவுடன் எந்த விடயத்தை கையில் எடுத்து தேர்தலில் வெற்றி பெறலாம் என்ற நோக்குடன் செயற் படும் இதர தமிழ்த் தரப்பினர் தமது தேர்தல் வெற்றிக்காக பொய் வாக்கு றுதிகளை மட்டுமன்றி நடைமுறை சாராக் கருத்துக்களையும் வெளியிட்டு மக்களை ஏமாற்றி வருகின்றனர்.

அத்துடன் இது அவர்களின் தேர்தல் கால உச்சரிப்பு மட்டுமே அல்லா மல் தேர்தல் முடிந்ததன் பிற்பாடான காலப்பகுதியில் முன்னெடுக்கும் செயற்பாடாகவும் இருக்கப்போவ தில்லை. கடந்தகாலங்களில் இத்த கையவர்களுக்கு வாக்களித்து தோல்வி கண்ட தமிழ் மக்கள் இனியும் அவ்வாறு ஏமாற்றமடைய மாட்டார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு- என்றார். (து)



## மன்னாரில் குருதித்தான முகாம்

மன்னார், ஜுலை 23

மன்னார் கறிற்றாஸ் வாழ்வுதயத்தின் உத விக்கரம் பிரிவின் மாபெரும் குருதித்தான முகாம் 7 ஆவது தடவையாக இன்று வியாழக்கிழமை வாழ்வுதய மண்டபத்தில் இடம்பெற்றது.

இக் குருதித்தான முகாம் கறிற்றாஸ் வாழ்வு தயத்தின் இயக்குநர் அருட்பணி செ.அன்ரன் அடிகளார் தலைமையில் இன்று காலை நடைபெற்றது. (ரி2-56)

# சரவணபவனின் வெற்றியைத்தான் பறைசாற்றுகின்றன பல இடங்களும்!

### காரைநகர் தவிசாளர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜுலை 23

நல்லூர், நவாலி, வட்டுக் கோட்டை, கோப்பாய், தென் மராட்சி மற்றும் காரைநகர் உள்ளிட்ட யாழ்ப்பாண மாவட்டம் சரவணபவனின் புதிய நாடாளுமன்ற உறுப்பி னருக்கான வெற்றியைப் பறை சாற்றி நிற்கின்றன என்று காரை நகர் பிரதேச சபைத் தவிசாளர் வி.கேதீஸ்வரதாஸ் தெரிவித்தார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் வெற்றிக்கான தேர்தல் பரப்பு ரைக்கூட்டம் காரைநகர் பிரதேச சபை உப தவிசாளர் க.பாலச்சந்திரன் தலைமையில் காரைநகரில் நடைபெற்றது.

அதில் உரையாற்றுகையில், தவிசாளர் வி.கேதீஸ்வரதாஸ் மேலும் தெரிவித்ததாவது:

அமைச்சுப் பதவிகள் பெறாது நாடாளுமன்றம் சென்று வெளியே நிற்பது என்ற விட யம் மலையேறிப்போய்விட் டது.

சிங்கள பெரும்பான்மையரசு டன் இணைந்த வகையில் முஸ்லிம் மற்றும் மலையக சிறுபான்மை கட்சிகள் அமைச் சுப்பதவியை பெற்றுவிட்டு எமக்கெதிரான கருத்துக்களை முன்வைத்தே அவர்களின் வரலாறு எழுதப்படுகின்றது. ஆனால் நாம் கூட்டமைப்பு சார்பாக அதிக ஆசனங்களைப் பெற்றுவிட்டு மீண்டும் வேதா ளம் முருங்கை மரத்தில் ஏறு வது போன்று வெளியே நிற் பது எம்போன்றவர்களால் ஏற்றுக்கொள்ளமுடியாதிருக்கி றது.

எனவே உண்மையான அரசி யல் இலக்கு அபிவிருத்தி தொடர்பில் ஆராய வேண்டு மெனில் தீர்மானம் மிக்க நாடா ளுமன்ற உறுப்பினர்களாக மாறவேண்டும். இல்லாவிடில் வெறும் 2 மில்லியன் கம்பெர லிய வீதித் திட்டமே எதிர் காலத்தில் மிஞ்சும்.

எனவே அன்பான தமிழ் மக்களே எல்லோரும் ஒன் றையே சிந்தித்து வீட்டுக்கட்சி யினரை வெற்றிபெறச் செய்து 21 ஆம் நூற்றாண்டில் இமா லய சாதனை படைத்திட வீட்டை நினையுங்கள்- என் றார். (த-50)

# ரெலோவைப் பாதுகாப்பது இளையோரின் கடமை

### கூறுகின்றது மன்னார் இளைஞர் அணி

மன்னார், ஜுலை 23

ரெலோ கட்சியைப் பாதுகாப்பது மன் னார் மாவட்ட இளைஞர்களின் கடமை என்று ரெலோவின் மன்னார் இளைஞர் அணியினர் தெரிவித்தனர்.

நடைபெறவுள்ள நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பில் போட்டியிடும் செல்வம் அடைக்கலநாதன் மற்றும் வினோநோக ராதலிங்கம் ஆகியோருக்கு ஆதரவுகோரி மன்னார் மாவட்டத்தில் பல இடங்களில் இளையோர் பரப்புரை மேற்கொண்டு வருகின்றனர். அதன்போதே மேற்கண்ட வாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

ரெலோவின் நாடாளுமன்ற உறுப்பினர்க ளாகவுள்ள செல்வம் அடைக்கலநாதன் மற்றும் வினோ ஆகியோர் அரசியல்வா திகள் என்பதனைவிட போராளிகள் என்றே கூறலாம்.

அவர்கள் பின்னடைவைச் சந்தித்தால் பாரம்பரிய விடுதலைப் போராட்டத்தை இழக்க நேரிடும். தமிழீழ விடுதலைப் போராட்டத்தை ஆரம்பித்த பெருமைக் குரிய மிகவும் பழமையான கட்சியாகவும் ரெலோ உள்ளது.

ஆயுதப்போராட்டத்தின் மூலமே ஈழத் தமிழர் பிரச்சினை உலகறிந்தது. அவ்வா றான போராட்டத்தின் மூலம் தற்போது ஜனநாயகப் பாதையில் பயணிக்கும் செல்வம் அடைக்கலநாதனும் வினோ நோகராதலிங்கமும் நாடாளுமன்றப் பொதுத்தேர்தலில் வெற்றி பெறவேண் டும் என்று தெரிவித்தனர். (த-213)

# வாக்களிக்கச் செல்வோருக்காக மேலதிக போக்குவரத்து சேவை

கொழும்பு, ஜூலை 23

பொதுத் தேர்தலில் வாக்களிப்பதற்கு மக்கள் சொந்த ஊர்களுக்குச் செல்வதற்காக இலங்கைப் போக்குவரத்துச் சபை, தனியார் மற்றும் ரயில் சேவைகளை அதிகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று பயணிகள் போக்குவரத்து அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

ஜூலை மாதம் 31 ஆம் திகதி தொடக்கம் ஆரம்பமாகும் நீண்ட நாள் விடுமுறையுடன் இந்தப் போக்குவரத்துச் சேவை அதிகரிப்பு இடம்பெறும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அமைச்சில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைப் போக்குவரத்து பஸ் சேவை ஆகக்கூடுதலான பஸ்களை இதற்காகச் சேவையில் ஈடுபடுத்தவுள்ளது. தனியார் துறையினரும் மேலதிக பஸ்களை சேவையில் ஈடுபடுத்தவுள்ளனர்.

சுமார் 600 பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன. தேவைக்கு அமைவாகப் பயண சேவைகளை அதிகரிப்பதற்கும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது. எந்தவித வருமானத்தையும் எதிர்பார்க்காமல் சேவைகள் முன்னெடுக்கப்படும்.

ரயில் சேவைகளையும் அதிகரிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. விசேடமாக அனுராதபுரம், மட்டக்களப்பு, கண்டி, பதுளை, வெலிகந்த வரையில் மேலதிக ரயில் சேவைகளை ஈடுபடுத்த எதிர்பார்க்கப்பட்டுள்ளது. (ரி1)

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு: இணைய விளம்பரம் மூலம் மோசடி

கொழும்பு, ஜூலை 23

வேலைவாய்ப்பைப் பெற்றுத்தருகின்றோம் என்று இணையத்தளம் ஊடாக விளம்பரத்தை வெளியிட்டு பண மோசடி இடம்பெற்றுள்ளது என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

தாய்லாந்தில் பாதுகாப்பு சேவையில் உள்ள தொழில் வாய்ப்புக்காக நபர்களைத் தெரிவுசெய்து அந்தத் தொழில் வாய்ப்புக்காக பணத்தைச் செலுத்திய பின்னர் குறிப்பிட்ட வகையில் தொழில்வாய்ப்பை பெற்றுக்கொடுக்கவில்லை என்று சிலர் முறைப்பாடு செய்துள்ளனர் என்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் தாய்லாந்தில் உள்ள இலங்கைத் தூதரகத்தை தொடர்பு கொண்டபோது, இலங்கையர்களுக்கு தாய்லாந்தில் இவ்வாறான தொழில் வாய்ப்புக்கான சந்தர்ப்பம் இல்லை என்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் நேற்று வெளியிடப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கையில் ஈடுபட்டோருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக இந்த முறைப்பாடு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ரி1)



## மழையுடனான வானிலை அதிகரிக்கும்

கொழும்பு, ஜூலை 23

நாட்டில் மேல், சப்ரகமுவ, தென் மற்றும் மத்திய மாகாணங்களில் இன்று மழையுடனான வானிலை சற்று அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது என வளிமண்டலவியல் திணைக்களம் இன்று அதிகாலை வெளியிட்டுள்ள வானிலை முன்னறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மேல், சப்ரகமுவ, தென் மற்றும் மத்திய மாகாணங்களில் அவ்வப்போது மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது. வடமேல் மாகாணத்திலும் அனுராதபுரம் மாவட்டத்திலும் பல தடவைகள் மழை பெய்யும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. சப்ரகமுவ மாகாணத்திலும் நுவரெலியா, களுத்துறை, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 75 மி.மீற்றருக்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன்கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக் கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி1)

## 40 மெற்றிக் தொன் நெல் இதுவரை அரசு கொள்வனவு

கொழும்பு, ஜூலை 23

அரசாங்கம் இதுவரை 40 மெற்றிக் தொன் நெல்லை கொள்வனவு செய்துள்ளது என்று நெற் சந்தைப்படுத்தும் சபை தெரிவித்துள்ளது. அதிகூடிய நெல் விளைச்சல் அம்பாறை மாவட்டத்திலிருந்து கிடைத்துள்ளது என்று அதன் தலைவர் கலாநிதி ஜடால் மானப்பெரும தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நெற்சந்தைப்படுத்தல் அதிகார சபையின் ஊடாக நெற்கொள்வனவு நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 40 தொன் வரை நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. கூடுதலாக அம்பாறை மாவட்டத்தில் இருந்தே கொண்டுவரப்பட்டுள்ளது. குருநாகல், மட்டக்களப்பு முல்லைதீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களிலும் நெற்கொள்வனவு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கடந்த பெரும்போகத்தில் பின்பற்றப்பட்ட நடைமுறைகளைப் போன்றே தற்போதும் முன்னெடுக்கப்படுகின்றது. உலர வைத்த நெல் ஒரு கிலோ ஐம்பது ரூபா என்ற அடிப்படையில் நெல் சந்தைப்படுத்தல் சபையினால் கொள்வனவு செய்யப்படுகின்றது. ஈரத் தன்மையுடன் காணப்படும் நெல் அரிசி ஆலை உரிமையாளர்கள் மற்றும் பிரதிநிதிகளின் ஊடாக 44 ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்படுகின்றது. அதேபோன்று ஒவ்வொரு பிரதேசங்களிலும் நெற்கொள்வனவு நடவடிக்கைகளை முன்னெடுத்து நெற்சந்தைப்படுத்தும் அதிகார சபையின் களஞ்சியசாலைகளுக்கு கையளிக்கும் செயற்பாடு முன்னெடுக்கப்படுகின்றது. இவற்றில் எவ்வித மாற்றங்களும் இல்லை. கடந்த வருடத்தில் கொள்வனவு செய்யப்பட்ட விலைக்கே கொள்வனவு செய்யப்படுகின்றது.விசேடமாக உர மானியத்தைப் பெற்றுக் கொண்டு ஒரு ஹெக்டயாருக்கும் கூடுதலாக நெற் செய்கையை மேற்கொண்ட விவசாயிகளிடம் இருந்து குறைந்தபட்சம் ஆயிரம் கிலோ கிராம் நெல்லை வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளோம் எனத் தெரிவித்துள்ளார். (ரி1)

## 33 பிக்குகள் படுகொலை: உரிமைமீறல் மனு நவம்பரில் விசாரணை

கொழும்பு, ஜூலை 23

அரந்தலாவையில் 33 பிக்குகள் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தில் கடும் காயங்களுடன் தப்பிய பிக்கு ஒருவர் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவின் விசாரணை எதிர்வரும் நவம்பர் 12ஆம் திகதி நடத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. உயர்நீதிமன்றம் இந்தத் தீர்மானத்தை அறிவித்துள்ளது. இந்தப் படுகொலையில் தொடர்புடைய தற்போது உயிருடன் இருக்கும் தீவிரவாதிகள் தண்டிக்கப்படவேண்டும் என்று கோரி அன்டௌல்பத்த புத்தசார என்ற பிக்குவே மனுவைத் தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி3)

## ஊடக செய்திகள் தொடர்பில் ஜனாதிபதி அதிருப்தி

கொழும்பு, ஜூலை 23

இலங்கையில் கொரோனாத் தொற்று தொடர்பில் பிழையான புள்ளிவிவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன எனவும், கொரோனாவை எதிர்த்துப் போராடுவதற்கான திட்டங்கள் குறித்த துல்லியமான மற்றும் தெளிவான தகவல்களைப் பெற அனைத்து வழிகளும் கிடைத்திருந்தாலும், உண்மைகளைத் தவறாக சித்தரிப்பது பொதுமக்களின் அமைதியின்மை மற்றும் அரசாங்கத்தின்மீது அதிருப்தியை ஏற்படுத்தும் என்றும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாட்டின் கொரோனா நிலைமை தொடர்பில் ஊடக அமைப்பு ஒன்று வெளியிட்டுள்ள செய்திகள் தொடர்பிலேயே ஜனாதிபதி அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

மேலும், கொரோனாவை எதிர்த்துப் போராடுவதில் இலங்கை வெற்றிகரமாக இருந்தாலும், இதுபோன்ற தவறான தகவல்கள் பொதுமக்களுக்குத் தெரிவிக்கப்படுகின்றமை மிகவும் துரதிர்ஷ்டவசமானது. இதுபோன்ற சம்பவங்கள் ஏற்படாமல் தடுக்க அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (ரி3)

## கஞ்சாவுடன் இருவர் கைது

கிளிநொச்சி, ஜூலை 23

பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உடுத்துறைப் பகுதியில் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய இவர்கள் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ரி3-316)

## சர்வதேசத்தை...

இவ்வாறு ராஜபக்ஷ அரசின் பேச்சாளரும் ஸ்ரீலங்கா பொது ஜன முன்னணியின் வேட்பாளருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார். 'தமிழ் மக்கள் அநாதைகளாக்கப்படவில்லை. அவர்களின் பின்னால் சர்வதேசம் நிற்கின்றது' என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் விடுத்துள்ள அறிவிப்பு தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

"சமஷ்டி முறைமையிலான தீர்வை ஒருபோதும் தமிழர்களுக்கு அரசு வழங்காது. புதிய நாடாளுமன்றத்தில் மூவின மக்களுக்கும் உரித்தான பொதுவான தீர்வையே அரசு வழங்கும். இந்த நிலைப்பாட்டிலிருந்து நாம் சற்றேனும் பின்நகரமாட்டோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தல் விஞ்ஞாபனத்தில் நடைமுறைக்குச் சாத்தியமில்லாத விடயங்களையே வலியுறுத்தியுள்ளது. அதனாலேயே அந்த விஞ்ஞாபனத்தை நாம் அடியோடு நிராகரிக்கின்றோம்.

சர்வதேச நாடுகளும் அமைப்புகளும் தத்தமது நலனில் அக்கறைகொண்டுதான் செயற்படுகின்றன. எனவே, சர்வதேசம் ஒருபோதும் இலங்கைத் தமிழர்களுக்குத் தீர்வு வழங்கமாட்டாது. சர்வதேசத்தை நம்பி ஏமாந்துபோக வேண்டாம் என்று சம்பந்தனிடம் நாம் கேட்டுக்கொள்கின்றோம்.

அதேவேளை, சம்பந்தன் இலங்கையில் இருந்துகொண்டுதான் இப்படியெல்லாம் வீரவசனம் பேசுகின்றார். அவர் சர்வதேசத்தில் இருந்துகொண்டு வீரவசனம் பேசவில்லை என்பதை அவரே கவனத்தில்கொள்ள வேண்டும்.

தேர்தல் காலம் என்றபடியால் சம்பந்தன் தலைமையிலான குழுவினர் வாய்க்கு வந்த மாதிரி கருத்துக்களை வெளியிடுகின்றனர். நாம் எந்தச் சந்தர்ப்பத்திலும் தமிழ் மக்கள் அநாதைகள் என்று கூறவும் மாட்டோம்; அப்படி நினைக்கவும் மாட்டோம். தமிழர்கள், சிங்களவர்கள் மற்றும் முஸ்லிம்கள் அனைவரும் இலங்கைத் தாயின் பிள்ளைகள் என்றுஅரசு நினைத்தே அரசு செயற்படுகின்றது. ஆனால், தமிழர்களின் அரசியல் தலைமைகள்தான் அவர்களைத் தனிவழியில் செல்லத் தூண்டுகின்றன. இதைத் தமிழ் மக்கள் நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும்" என்றார். (அ ,22)

## டக்ளஸ், அங்கஜனால்...

களை ஊக்குவிக்கும் வகையில் அரச அதிகாரிகள் செயற்பட்டால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்' என்று ஓய்வுபெற்ற தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் எம்.எம். மொஹமட் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் இன்று மதியம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அமைச்சர் சமல் ராஜபக்ஷ கலந்து கொண்ட அரச அபிவிருத்தித் திட்ட ஆரம்ப நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இந்த நிகழ்வில் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்ட வேட்பாளர்களான டக்ளஸ் மற்றும் அங்கஜன் ஆகியோர் கலந்து கொண்டனர். வேட்பாளர்கள் அரச அபிவிருத்தி திட்ட நிகழ்வில் பங்கேற்கலாமா என்று ஊடக சந்திப்பில் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்குப் பதிலளித்த மொஹமட், வேட்பாளர்கள் பங்கேற்க முடியாது என்று குறிப்பிட்டார்.

அப்படியாயின் கலந்து கொண்ட வேட்பாளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமா என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு, வேட்பாளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படாது. நிகழ்வுக்குப் பொறுப்பான அதிகாரிகளுக்கு எதிராகவே நடவடிக்கை எடுக்கப்படும் என்று குறிப்பிட்டார். (ஒ,5)

## கறுப்பு ஜூலை...

சபையின் உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் ஒன்று கூடி, அஞ்சலி செலுத்தினர்.

1983 ஆம் ஆண்டு ஜூலை 23 ஆம் திகதி , தமிழ் மக்களுக்கு எதிராக முடுக்கிவிடப்பட்ட இனவாதத் தாக்குதல்களில் உயிர்நீத்த பொது மக்களையும், வெலிக்கடைச் சிறையில் கொல்லப்பட்ட குட்டிமணி, தங்கத்துரை உள்ளிட்ட தமிழ்க் கைதிகளையும் நினைவு கூர்ந்து அஞ்சலிக்கப்பட்டது.

அஞ்சலி செலுத்துவதற்கான பொது ஈகைச்சுடர் தவிசாளரினால் ஏற்றப்பட்டதுடன் பிரதேச சபையின் உறுப்பினர்கள் கைகளில் மெழுகுவர்த்தியை ஏந்தியவாறு அஞ்சலித்தனர்.

தொடர்ந்து " இனியொரு கறுப்பு ஜூலை வேண்டாம். இனவாதம் அரச இயந்திரம் முதல் சிவில் சமூகங்கள் வரையில் முற்றாக ஒழிக்கப்படவேண்டும்" என்ற தொனிப்பொருளில் தவிசாளர் மற்றும் உறுப்பினர்களின் உரைகளும் இடம்பெற்றன. (அ25)

## 'டில்லு குரூப்'..

இளைஞனே நேற்றுப் புதன்கிழமை , யாழ்ப்பாணம் மடம் வீதி பகுதியில் ரோந்துக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளார். யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளில் இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவங்களுடன் இவருக்குத் தொடர்பு உள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். கைது செய்யப்பட்ட நபர் யாழ்ப்பாணம் குற்றத்தடுப்பு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (அ,25)

## டிப்பர் விபத்து...

6.00 மணிக்கு இடம்பெற்றுள்ளது. நாவற்குழி தச்சன்தோப்பு பகுதியில் இருந்து டிப்பர் வாகனம் ஒன்று மண் ஏற்றியபடி வந்துகொண்டிருந்தது. அதில் வாகனச் சாரதியும், நாவற்குழி படைமுகாமைச் சேர்ந்த சிப்பாய் ஒருவரும் பயணித்துள்ளனர். அப்போது எதிர்பாராதவிதமாக வாகனத்தின் முன் சக்கர டயர் வெடித்ததால், வேகக்கட்டுப்பாட்டை இழந்த டிப்பர் அருகிலுள்ள பிள்ளையார் கோவில் மடப்பள்ளி மண்டபத்துடன் மோதி விபத்துக்குள்ளானது . இதனால் ஆலயப் பகுதியும் சேதமடைந்துள்ளது. அத்தோடு வாகனத்தில் பயணித்த இருவரும் காயமடைந்தனர். சாரதி யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். காயமடைந்த சிப்பாயை சிகிச்சைகாக படையினர் அழைத்துச் சென்றுள்ளனர்.

இதேவேளை, இந்த விபத்து காலை 6 மணிக்கு இடம்பெற்றவுடனேயே, பொதுமக்கள் சாவகச்சேரிப் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தி இருந்தனர். இருப்பினும் 8.45 வரை பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்றிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ-159)

## புதினம் தெரியுமோ?

தான் அறப்படிச்ச தபால் மூல வாக்காளர்கள் கழுகுக்குப் போட்டவை. அப்பிடி இந்தமுறையும் ஒரு கூத்து நடந்திருக்கு.

தபால் மூல வாக்களிப்பு முடிஞ்சு கையோட ஒருத்தர் தன்ர சிநேகிதர்களோட அதைப்பற்றி கதைச்சுக் கொண்டிருந்தார். அப்ப ஆருக்கு வாக்குப்போட்டது எண்ட கதை வந்திட்டு. அப்ப எங்கட அறப்படிச்ச உத்தியோகத்தர் பெருமை யோட நான் வீட்டுக்கும் ஆறாம் நம்பருக்கும் தான் போட்டனான் எண்டிருக்கிறார். அவரின்ர கூட்டாளிக்கு ஒரே குழப்பம்.

நீ முதலமைச்சரின்ர செம்பு தானே , பிறகேன் சித்தருக்குப் போட்டனீ? எண்டு கேட்டிருக்கிறார். அதுக்கு அறப்படிச்சவர் சொன்னாராம் முதலமைச்சர் வீட்டில தானே கேக்கிறார். அதுதான் அவரின்ர நம்பருக்கும் போட்டு,வீட்டுக்கும் போட்டனான் எண்டு சொல்லியிருக்கிறாராம்.


தான் வாக்களிக்க விரும்பும் வேட்பாளர் எந்தக் கட்சியில போட்டியிடுகிறார் எண்டதே தெரியாதவைதான் , தபால்மூல வாக்குப் போட்டிட்டு, லெக்சன் நடத்த அதிகாரிகளாகப் போகப் போயினமாம். நாடு நல்லா விளங்கிடும். இவையின்ர அரைகுறை அறிவால, விக்கியருக்குப் போகுற வாக்குகளால சித்தருக்குத்தான் 'சுவிப்' அடிச்சிருக்கு.

## 70 வீதமானோர்....

கள் பதிவாகியிருப்பதால், 70 வீதத்துக்கும் அதிகமான வாக்குகள் பதிவாகும் என்று எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இலங்கையில் ஜேர்மனியின் தூதுவராகப் பணியாற்றிய ஜோர்ன் ரொட், பணிக்காலம் நிறைவுற்று தாயகம் செல்லவுள்ளார். இதனால் நேற்றுக்காலை அலரி மாளிகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்சவை, ஜோர்ன் ரொட் சந்தித்து பிரியாவிடை பெற்றுக் கொண்டார். அதன் போதே மஹிந்த ராஜபக்ச இவ்வாறு தெரிவித்துள்ளார்.

" கொரோனாத்தொற்றுக் காரணமாக இம்முறை பொதுத்தேர்தலில் வாக்களிப்பு வீதம் சடுதியாகக் குறையும் என்று பல அமைப்புக்களும் கருத்துக் கூறிவருகின்றன. ஆனால் நிலைமை அப்படியல்ல. இப்போது நடந்து முடிந்துள்ள தபால்மூல வாக்களிப்பில் கணிசமானோர் வாக்களித்துள்ளனர். இதனடிப்படையில் இம்முறை நிச்சயமாக நாடளாவிய ரீதியில் 70 சதவீதத்துக்கும் அதிகமானோர் வாக்களிப்பர் என நம்புகிறோம்" என்று அவர் தெரிவித்துள்ளார். (அ)

## சிறுவர்களை தடுத்துவைக்க..



தெரிவித்துள்ளார்.

அச்சுவேலி செல்வநாயகபுரம் பகுதியில் அரச சான்று பெற்ற பாடசாலையின் தடுப்புக்காவல் இல்லம் இன்று திறந்து வைக்கப்பட்டது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"12 வயதுக்கும் 18 வயதுக்கும் இடைப்பட்ட சிறுவர்கள் குற்றங்கள் செய்தால், அவர்கள் நீதிமன்ற நடவடிக்கையின் பொருட்டு தடுப்புக்காவல் இல்லத்தில் தடுத்து வைக்கப்படுவார்கள். ஆனால் சிறுவர்களை இங்கு தடுத்து வைப்பதற்கு நான் அனுமதிக்க மாட்டேன். சிறுவர்கள் தவறுகளை உணர்ந்து செய்வதில்லை. எது சரி, எது பிழை என்று தெரியாத நிலையிலேயே அவர்கள் தவறு செய்கிறார்கள். இவ்வாறான இல்லங்களில் தடுத்து வைத்தல், சிறைக்குள் அடைத்தல் என்பன அவர்களை அதிக மன உளைச்சலுக்கு உள்ளாக்குவதுடன், எதிர்காலத்தில் அவர்களை அதிதீவிரவாதப் போக்குடையவர்களாக மாற்றக்கூடிய சந்தர்ப்பத்தையும் ஏற்படுத்துகிறது. சிறுவர்களை சிறுவர்களாகக் கையாள வேண்டிய கடமை அரச அதிகாரிகளுக்கு உள்ளது " என்றார்.

இந்தத் தடுப்புக்காவல் இல்லம் மாகாணசபைக்கு குறித்தொதுக்கப்பட்ட நிதியின் கீழ், மூன்று மாடிக் கட்டடங்களாக கட்டப்பட்டுள்ளன. சிறு தண்டனைக்கு உள்ளானவர்கள் மற்றும் நீதிமன்ற வழக்கு நடவடிக்கைகளுக்கு உட்பட்ட சிறுவர்களை தடுத்து வைத்து மீண்டும் அவர்களை சிறைச்சாலை வாகனத்தின் மூலம் நீதிமன்றங்களுக்கு அழைத்துச் செல்லும் பொருட்டு இந்த இல்லம் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி1-25)

## ஆலயப் பொங்கலை...

விடுத்துள்ளார். அத்துடன், பொங்கல் விழாவில் சுகாதார நடைமுறையைப் பேணி, 50 பேர் மாத்திரமே கலந்து கொள்ள, கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் அனுமதியளித்துள்ளார் என்றும் தெரிவித்துள்ளார். நாளை அதிகாலை 3 மணிக்கு கொக்குத்தொடுவாய் பிள்ளையார் ஆலயத்தில் இருந்து மடைப்பண்டம் எடுத்து வரப்பட்டு, வழிபாடுகள் இடம்பெறவுள்ளன . (அ)

## கூரை பிரித்து...

நெல்சன் என்பவரது வீட்டிலேயே நேற்று மாலை இடம்பெற்றுள்ளது. பருத்தித்துறை பகுதியில் உள்ள உறவினர் ஒருவரின் சுப நிகழ்வுக்காக வீட்டில் உள்ள அனைவரும் சென்றுள்ளனர் . நிகழ்வு முடிந்து அவர்கள் இரவு 9:30 மணியளவில் மீண்டும் வீட்டுக்கு வந்த போது கூரை பிரித்து நகையும் கமராவும் திருடப்பட்டமை தெரியவந்துள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் வீட்டு உரிமையாளர் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். மேலதிக விசாரணைகளை அச்சுவேலி குற்றத்தடுப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(அ-25)

## சந்திப்பு...

உள்ளிட்ட வேட்பாளர்கள் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது சமகால அரசியல் நிலைமைகள் தொடர்பிலும் தேர்தல் கள நிலைமைகள் குறித்தும் கலந்துரையாடியதுடன், தேர்தல் விஞ்ஞாபனப் பிரதி ஒன்றையும் அவர்கள் , ஆதீன குரு முதல்வரிடம் வழங்கினர். (அ)

1956ஆம் ஆண்டுக்கு பின் முதல் தடவையாக

# நோபல் பரிசு விழா இரத்து




ஸ்டக்ஹோம், ஜூலை 23

இவ்வாண்டுக்கான நோபல் பரிசு விழா இரத்து செய்யப்பட்டுள்ளது. கொரோனா வைரஸ் பரவல் காரணமாக நிகழ்வு இரத்துச் செய்யப்பட்டுள்ளது என்று நோபல் பரிசு நிர்வாக அமைப்பு தெரிவித்துள்ளது.

சுவீடன் தலைநகர் ஸ்டக்ஹோமில் ஒவ்வொரு வருடமும் டிசம்பர் மாதம் 10ஆம் திகதி நோபல் பரிசு விழா இடம்பெற்று வருகின்றது. மருத்துவம், இயற்பியல், இரசாயனவியல், இலக்கியம், அமைதி மற்றும் பொருளாதார துறைகளில் சிறப்பாக பணியாற்றியவர்களுக்கென நோபல் பரிசு ஒவ்வொரு வருடமும் வழங்கப்படுகின்றது. கடந்த 1956 ஆம் ஆண்டு உலக போர் காரணமாக நோபல் பரிசு விழா இரத்து செய்யப்பட்டது. தற்போது கொரோனா பரவல் விழா மீண்டும் இரத்துச் செய்யப்படுகின்றது என்று நோபல் பரிசு நிர்வாக அமைப்புத் தெரிவித்துள்ளது. (ரி1)

## பிடிவாதத்தைக் கைவிட்டார் ட்ரம்ப் முகக் கவசம் அணிய வலியுறுத்து



வொஷிங்டன், ஜூலை 23

அமெரிக்காவில் கொரோனா வைரஸ் தொற்று மேலும் அதிகரிக்கும் எனவும், மக்கள் முகக் கவசங்களை கட்டாயம் அணிய வேண்டுமெனவும் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார். அமெரிக்காவின் தென் மாகாணங்களில் வைரஸ் பரவும் வேகம் கவலைக்குரியதாக உள்ளது என்று அவர் குறிப்பிட்டுள்ளார். சமூக இடைவெளியைப் பின்பற்ற முடியாத இடங்களில் முகக் கவசங்கள் அணிகின்றமையை வழமையாக்கிக்கொள்ள வேண்டும். தான் எங்கு சென்றாலும் தற்போது முகக் கவசம் அணிவதை வழமையாக்கிகொண்டுள்ளார் என்றும் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார். கொரோனாத் தொற்று அமெரிக்காவில் அதிகரிக்கத் தொடங்கியதிலிருந்து முகக்கவசம் அணிவதை அவர் தவிர்த்து வந்ததுடன் அண்மையில் காயமடைந்த இராணுவ வீரர்களைப் பார்வையிடச் சென்றபோதே முதன்முதலில் மாஸ்க் அணிந்திருந்தார். இதேவேளை முகக் கவசம் அணிவதற்கு எதிராக ட்ரம்ப் கருத்து வெளியிட்டு வந்தமையும் குறிப் பிடத்தக்கது. (ரி1)

## பிரேசில் ஜனாதிபதிக்கு மூன்றாவது முறையும் கொரோனா பொசிடிவ்



பிரேசிலியா, ஜூலை 23

பிரேசில் ஜனாதிபதி ஜெய்ர் போல்சனோராவுக்கு செய்யப்பட்ட மூன்றாவது கொரோனா பரிசோதனையிலும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஜூலை 7 ஆம் தேதி பிரேசில் அதிபர் ஜெய்ர் போல்சனோராவுக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டு, அவர் இல்லத்தில் தனிமைப்படுத்தப்பட்டார். இந்த நிலையில் தான் விரைவில் பணிக்குச் செல்ல வேண்டும், வீட்டில் தனித்திருக்க முடியவில்லை என்று கூறி போல்சனோரா சில நாட்களுக்கு மீண்டும் கொரோனா பரிசோதனை செய்துகொண்டார்.

இதன் முடிவில் அவருக்கு கொரோனா தொற்று மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டது. இந்த நிலையில் நேற்று மீண்டும் ஜெய்ர் போல்சனோராவுக்கு கொரோனா பரிசோதனை செய்யப்பட்டது.

இதன் முடிவு இன்று வெளியாகியது. இதில் மீண்டும் போல்சினோராவுக்கு கொரோனா உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று பிரேசில் அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கொரோனா தொற்றிலிருந்து இன்னும் போல்சனாரோ மீளவில்லை என்பது தெளிவாகியுள்ளது. (ரி1)

---

## 80 வயதானாலும் நடிப்பேன்


வெளிநாட்டிலிருந்து வந்து பிரபலமான நடிகைகளில் ஒருவர் எமி ஜாக்சன். இவர் தமிழில் மதராசப்பட்டினம் படத்தின்மூலம் திரையுலகுக்கு அறிமுகமானார்.

8 வருட சினிமா வாழ்க்கையில் தமிழ், தெலுங்கு, கன்னடம், இந்தி என அனைத்து மொழிகளிலும் நடித்திருக்கிறார். இவர் டைம்ஸ் ஒஃப் இந்தியாவுக்கு அளித்த பேட்டியில், என்னை நடிகையாகவும், தனிபட்ட முறையிலும் வளர்த்து ஆளாக்கிய இடம் இந்தியா. முதன்முதலில் மதராசபட்டினம் படத்தில் நடிகையாக அறிமுகமானேன்.

சுதந்திரமாகவும், அர்ப்பணிப்புடனும் வேலை செய்வது எப்படி என கற்றுக்கொண்டேன். மேலும் கற்றுக்கொள்ள ஆர்வமாக இருக்கிறேன். குடும்பத்தின் முக்கியத்துவம் கருதி சினிமாவுக்கு இப்போது வர வாய்ப்பில்லை. என்றாலும் நான் ஒரு நடிகையாக 80 வயது ஆனாலும் நடிப்பேன். நல்ல கதைகள் வர காத்திருக்கிறேன்-என்றார் எமி.



## ஷாருக்கானின் பாதுகாப்பு



பிரபல இந்தி நடிகர் ஷாருக்கான் குடும்பத்தினருடன் வசிக்கும் சொகுசு பங்களாவை பொலித்தீன் கவரால் மூடி உள்ளார். இந்த பங்களாவில் குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை பலர் வசிக்கின்றனர். கொரோனா பரவலை தடுக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று செய்திகள் பரவின. ஆனால் ஷாருக்கான் கொரோனாவுக்காக இந்த நடவடிக்கை எடுக்கவில்லை என தகவல் வெளியாகி உள்ளது. மும்பையில் பெய்யும் அதிகமான மழையிலிருந்தும், பலத்த காற்றிலிருந்தும் பாதுகாத்துக் கொள்ளவே வீட்டின் வெளிப்புறத்தை பிளாஸ்டிக் கவரால் மூடியிருப்பதாக கூறப்படுகிறது.

ஒவ்வொரு வருடமும் மழைக் காலங்களில் ஷாருக்கான் இப்படிச் செய்வதை வழக்கமாக வைத்திருப்பதாகவும் சொல்லப்படுகிறது. ஆனால் இதுகுறித்து ஷாருக்கான் தரப்பிலிருந்து எந்தவித விளக்கமும் அளிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## அர்ஜூன் மகளுக்கும் கொரோனா!



அர்ஜுனின் மகளும் நடிகையுமான ஐஸ்வர்யாவுக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

நடிகர் அர்ஜுனின் உறவினரும் பிரபல கன்னட நடிகருமான சிரஞ்சீவி சார்ஜாவின் திடீர் மரணம் ரசிகர்கள் மத்தியில் மிகுந்த சோகத்தை ஏற்படுத்தியது. அந்த சோகத்தில் இருந்து ரசிகர்கள் மீளாத நிலையில், மற்றொரு அதிர்ச்சி செய்தி கிடைத்துள்ளது.

சிரஞ்சீவி சார்ஜா மற்றும் அர்ஜுனின் சகோதரரும் நடிகருமான துருவா சார்ஜாவிற்கும் அவரது மனைவிக்கும் கொரோனா பாதித்தது. இந்நிலையில் கொரோனா வைரஸ் பரிசோதனை செய்ததில் அர்ஜுனின் மகளும் நடிகையுமான ஐஸ்வர்யாவுக்கும் தொற்று உறுதியாகியுள்ளது.



# வெல்லப்போவது யார்?

லண்டன், ஜூலை 23

இங்கிலாந்து மற்றும் மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் இடையிலான 3 ஆவது டெஸ்ட் ஆட்டம் நாளை மன்செஸ்டரில் உள்ள ஓல்ட் டிராபோர்ட் மைதானத்தில் ஆரம்பமாகின்றது. ஜேசன் ஹோல்டர் தலைமையிலான மேற்கிந்தியத் தீவுகள் அணி 3 டெஸ்ட் ஆட்டங்கள் கொண்ட தொடரில் பங்கேற்க இங்கிலாந்து சென்றுள்ளது. ரசிகர்கள் இல்லாமல், கொரோனா தடுப்பு பாதுகாப்புடன் நடந்த இந்த தொடரின் முதல் டெஸ்ட் ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 4 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. 2ஆவது டெஸ்ட் ஆட்டத்தில் இங்கிலாந்து 113 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. அதனால் தொடர் 1:1 என்ற கணக்கில் சமநிலையில் உள்ளது.

இந்த டெஸ்ட் தொடரை வெல்லப்போவது யார்? என்று ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகிறது. சொந்த மண்ணில் விளையாடுவதால் இங்கிலாந்திற்கு தொடரை வெல்ல அதிகமான வாய்ப்பு உள்ளது. கடந்த டெஸ்டில் 3ஆவது நாள் ஆட்டம் மழையால் ரத்தாகியிருந்தாலும் அந்த அணி வீரர்கள் சிறப்பாக ஆடி வெற்றியைப் பெற்றனர். ஒருவேளை ஆட்டம் சமநிலையில் முடிந்தால் டெஸ்ட் தொடரும் சமநிலையில் முடியும்.

இங்கிலாந்து அணி துடுப்பாட்டம் மற்றும் பந்து வீச்சில் மிகவும் நல்ல நிலையில் இருக்கிறது. குறிப்பாக பென் ஸ்டோக்ஸ் அணிக்கு முதுகெலும்பாக உள்ளார். இந்த டெஸ்டிலும் அவர் மீதான எதிர்பார்ப்பு அதிகமாக இருக்கிறது. கொரோனா பாதுகாப்பு விதிமுறைகளை மீறினார் என கடந்த டெஸ்டில் நீக்கப்பட்ட ஆர்ச்சர் அணிக்கு திரும்பி இருக்கிறார். அதனால் வீரர்கள் தேர்வு இங்கிலாந்துக்குச் சவாலானது.

மேற்கிந்தியத் தீவுகள் அணி முதல் டெஸ்டை போலவே இந்த டெஸ்டிலும் வென்று 32 ஆண்டுகளுக்குப் பிறகு இங்கிலாந்து மண்ணில் தொடரை வெல்லும் ஆர்வத்தில் உள்ளது. அந்த அணியில் துடுப்பாட்டத்தில் பிளாக்வுட், புரூக்ஸ், பிராத்வெயிட் ஆகியோரும், பந்துவீச்சில் கேப்ரியல், கப்டன் ஹோல்டர், அல்ஜாரி ஜோசப், கேமர் ரோச் ஆகியோரும், ஆல் ரவுண்டரில் ராஸ்டன் சேஸூம் நல்ல நிலையில் உள்ளனர்.(ரி2)

# 14 நாள் கட்டாயம்

## கங்குலியின் கோரிக்கையை நிராகரித்தது ஆஸி

புதுடெல்லி, ஜூலை 23

14 நாள்கள் தனிமைப்படுத்துதல் நடைமுறையை இந்திய கிரிக்கெட் அணி வீரர்கள் கடைபிடிக்கப்பட வேண்டும் என்று ஆஸ்திரேலியக் கிரிக்கெட் சபை கண்டிப்புடன் தெரிவித்துள்ளது.

இந்திய கிரிக்கெட் அணி இந்த ஆண்டு இறுதியில் ஆஸ்திரேலியாவில் சுற்றுப் பயணம் செய்து 4 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. இந்தத் தொடரின்போது இந்திய அணி வீரர்களை 14 நாள்கள் தனிமைப்படுத்துவது என்பது அதிகமானதாகும். அதைச் சற்று குறைக்க வேண்டும் என்று ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபையிடம், இந்திய கிரிக்கெட் சபைத் தலைவர் சவுரவ் கங்குலி வேண்டுகோள் விடுத்து இருந்தார்.

ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபையின் இடைக்கால தலைமை செயல் அதிகாரி நிக் ஹாக்லி இது தொடர்பாக தெரிவித்ததாவது:

வெளிநாட்டில் இருந்து வருபவர்கள் கட்டாயம் 14 நாள்கள் தனிமைப்படுத்தப்பட வேண்டும் என்பது ஆஸ்திரேலிய அரசின் விதிமுறையாகும். அதை இந்திய கிரிக்கெட் அணியும் கடைப்பிடித்தாக வேண்டும். அதேநேரத்தில் தனிமைப்படுத்துதல் காலத்திலும் பயிற்சி பெறும் வகையில் இந்திய அணியினருக்கு அனைத்து வசதிகளும் சிறப்பாகச் செய்து கொடுக்கப்படும். அடிலெய்டு மைதானத்தில் உள்ள ஹோட்டலில் தனிமைப்படுத்துதலுக்குத் தேவையான வசதிகள் உள்ளன- என்றார். (ரி2)

# ஸ்ரீபாலி வீரக்கொடி விரைவில் ஓய்வு!

கொழும்பு, ஜூலை 23

இலங்கை மகளிர் கிரிக்கெட் அணியின் சகலதுறை வீராங்கனை ஸ்ரீபாலி வீரக்கொடி சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெறவுள்ளார் என அறிவித்துள்ளார்.

34 வயதான வேகப் பந்து வீச்சாளர் ஸ்ரீபாலி வீரக்கொடி, சர்வதேச கிரிக்கெட் அரங்குகளில் 89 ஒருநாள் போட்டிகளிலும், 58 இருபதுக்கு 20 போட்டிகளிலும் விளையாடியுள்ளார்.

தனிப்பட்ட காரணங்களுக்காகவே அவர் ஓய்வுப் பெறப் போகிறார் என அறிவித்துள்ளார். இவர் ஒருநாள் கிரிக்கெட் அரங்கில் 58 இலக்குகளையும், இருபதுக்கு 20 கிரிக்கெட் அரங்கில் 31 இலக்குகளையும் கைப்பற்றியுள்ளார்.(ரி2)



# மெதுவாக நடப்போருக்கு கொரோனா வாய்ப்பு?

நடை வேகம் என்பது உடல்நலத்தின் முக்கிய அளவுகோலாக மருத்துவ உலகம் ஏற்றுக்கொண்டுள்ளது. அண்மையில், கொரோனாத் தொற்று ஏற்படுவதற்கும், நடை வேகத்துக்கும் தொடர்பு உள்ளதா என்பதை பிரிட்டன் விஞ்ஞானிகள் ஆராய்ந்துள்ளனர்.

பிரிட்டன் அரசின் 'பயோபேங்க்' அமைப்பு, பல்லாயிரம் பேரின் உடல்நல விவரங்களை தொடர்ந்து சேகரித்து வருகிறது. அதனிடமிருந்து பெற்ற, 4 லட்சம் பேரின் தகவல்படி, 973 பேருக்கு மருத்துவமனையில் சேர்க்குமளவுக்கு கோவிட் 19 தாக்குதல் தீவிரமாக இருந்தது.

பயோபேங்கின் தகவல் கோப்புகளிலிருந்து, கொரோனா தொற்றியோரின் நடை வேகத்தையும், கொரோனா தொற்றாதோரின் நடை வேகத்தையும் விஞ்ஞானிகள் ஆராய்ந்தனர். இதில், சராசரி எடை உள்ளோரில் மணிக்கு, 6.4 கி.மீ., வேகத்தில் நடக்கும் திறன் தனக்கு இருப்பதாக சொன்னோரை விட, 4.8 கி.மீ., வேகத்தில்தான் தங்களால் நடக்க முடியும் என்று சொல்லியிருந்தோருக்கு கொரோனா தாக்கும் வாய்ப்பு இருமடங்கு இருந்தது தெரியவந்தது.

வேகமாக நடப்போருக்கு உடலில் பிற நோய்கள் குறைவாகவும், நோய் எதிர்ப்புத் திறன் அதிகமாகவும் இருப்பதே இதற்குக் காரணம் என, 'மெட் ஆர்க்சைவ்' இணைய இதழில் வெளியான ஆய்வில், விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

# திருமணமாகும் மகனுக்கு சமையல் பாடம் எடுத்த தாய்




விரைவில் திருமணமாக உள்ள தன் மகனுக்கு, சமையல் குறித்து நூதன முறையில் பாடம் எடுத்த தாயின் செய்முறைப் படம் இணையத்தில் வைரலாகி வருகிறது. ஆண்கள் என்றாலே சமையலுக்கும் அவர்களுக்கும் சம்பந்தமில்லை என்ற நிலைதான் பெரும்பாலான வீடுகளில் இருக்கிறது. இந்தச் சூழல் மெல்ல மெல்ல மாறிவந்தாலும் திருமணமாகும் முன் சமைக்கத் தெரிந்த இளைஞர்களின் எண்ணிக்கை ஒப்பீட்டளவில் குறைவு.

இந்நிலையில், விரைவில் திருமணமாகவுள்ள மகனுக்கு, உளுந்தம் பருப்பு எது? துவரம் பருப்புக்கும் பாசிப் பருப்புக்கும் உள்ள வித்தியாசம் என்ன? சாம்பாரில் எந்தப் பருப்பு போடுவார்கள் என்றெல்லாம் விரிவாக விளக்கியுள்ளார் ஒரு தாய்.

ஒருநாளில் புரிந்துவிடாது என்பதை உணர்ந்தவர், அனைத்துப் பருப்பு வகைகளிலும் சிறிதளவை எடுத்துச் சேகரித்து, நோட்டுப் புத்தகத்தில் ஒட்டி, அதற்குக் கீழே பெயரையும் எழுதிக் கொடுத்துவிட்டார். இந்தப் படம் தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது.

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 23.07.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.